# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2024 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

[*2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2024, பெப்புருவரி மாதம் 22 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 24.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2024 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 19 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

*ச.வ.ஓ. (கூட்.) 2/2019*

**இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

முன்னுரை

"இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்" என அறியப்படுவதும் அழைக்கப்படுவதுமான நம்பிக்கைப் பொறுப்பு நிதியமொன்று, கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ந.ச. மாலினி சேனாநாயக்கவினால் 2014. திசெம்பர் 1 ஆம் திகதிய 309 ஆம் இலக்கத்தைக் கொண்ட நம்பிக்கைப் பொறுப்புறுதி மூலம் அதன் உறுப்பினர்களால் இணங்கியொழுகப்பட்ட விதிகளுக் கிணங்கச் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுறக்கொண்டு நடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங் களையும் இதுவரை சொல்லப்பட்ட நிதியத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாலும், அத்துடன் அது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக விருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை ஒன்றிணைத்தல்

**2.** (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்ன ரும் (இதனகத்துப்பின்னர் "நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் தற்போதைய உறுப்பினர்களும் அல்லது இத்தால்

அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் ''கூட்டிணைக்கப்பட்ட குழு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ''இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்'' என்னும் பெயரின் கீழும், மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவாயிருத்தலும் வேண்டுமென்பதோடு அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும்படலாமென்பதுடனும், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அதன் விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் கருத்துக்குட்படவும் அதன் நோக்கங்களுக்காகவும் கூட்டிணைக்கப்பட்ட குழு வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள், கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலுக்கும் மற்றும் அது தொடர்பாகவும் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

*கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பொதுக் குறிக்கோள்கள்*

**3.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் ஏற்புடைமையாகும். எழுதப்பட்ட சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு, அத்தகைய சட்டத்துக்கமைய பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் வேறு தொடர்புபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம், இருதய நோய்களுக்கான காரணியும் அத்தகைய நோய்களைத் தடுத்தலும் உட்பட, எல்லாக் கருமங்கள் மீதும் பொதுமக்களின் விழிப்புணர்ச்சியை மேம்படுத்துதல் ;

(ஆ) இலங்கையிலுள்ள ஏதேனும் வைத்தியசாலையில் சிகிச்சையை நாடுகின்றவர்களும் நிதிகள் தேவைப்படுகின்றவர்களுமான இருதய நோயாளிகளுக்கு நிதியுதவி வழங்குதல் ;

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதில் கூட்டிணைக்கப்பட்ட குழு, அத்தகைய நடைமுறைப்படுத்துதலானது, இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயம், பிறப்பிடம் அல்லது அத்தகைய எவையேனும் ஏதுக்களில் ஏதேனுமொன்றின் அடிப்படையின் மீதான ஏதேனும் வேறுபாடின்றி நிறைவேற்றப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

*அரசாங்கத்தின் அல்லது மாகாண அமைச்சினது அல்லது திணைக் களத்தினது பணியுடன் முரண்பாடில்லாது இருப்பதனை கூட்டிணைக்கப் பட்ட குழு உறுதிப் படுத்துதல்*

**4.** கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்கள், கூட்டிணைக் கப்பட்ட குழுவின் பணிக்கும், அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக் களத்தினால் ஒரே நேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக் கும் இடையே முரண்பாடெதனையும் உருவாக்காதவகையில் அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தல்*

**5.** (1) 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கும் விதிகளுக்கும் அமைய, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முகாமைத்துவ மற்றும் நிருவாக அலுவல்கள் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினரான பதவிதாங்குநர்களைக் கொண்டுள்ள நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையொன்றினால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று பதவிவகிக்கின்ற நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபை இவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளுக்கமைந்த, 7 ஆம் பிரிவின்கீழான விதிகளின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் முதலாவது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை நியமிக்கப்படும் வரை அல்லது தேர்ந்தெடுக் கப்படும்வரை கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால நம்பிகைப் பொறுப்பாளர்கள் நிதியத்தின் சபையாகப் பணியாற்றுதல் வேண்டும்.

(ஆ) இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2), (3) மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, இடைக்கால நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபை, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இடைக்கால நிருவாகத்துக்காக, இச்சட்டம் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத கூட்டிணைக் கப்பட்ட குழுவின் இடைக்கால நிர்வாகத்திற்கான விதிகளை ஆக்குவதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் இடைக்கால சபையின் ஏதேனும் முடிபு அதன் சமூகமளித்துள்ள உறுப்பினர்களின் பெரும் பான்மையோரால் எடுக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் முதலாவது நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபை, இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து ஓராண்டிற்குள் நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

3 (அ) போஷகர்களும் மதியுரைநர்களும் உட்பட, நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் ஒவ்வொரு பதவிதாங்குநரும் மூன்றாண்டு காலப்பகுதி யொன்றுக்கு நியமிக்கப்படுதல் அல்லது தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர், போசகர் அல்லது மதியுரைநர், சொல்லப்பட்ட மூன்றாண்டு காலப்பகுதி கழிந்ததன் பின்னர் மீள நியமிக்கப்படுவதற்கு அல்லது மீளத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகவுடையராதலும் வேண்டும்.

(ஆ) பதவி தாங்குநரொருவரின் இறப்பு, பதவிவிலகுகை, உடற்றகுதியீனம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் காரணமாக வெற்றிடமொன்று ஏற்படும் பட்சத்தில், நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையானது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளைக் கருத்திற்கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆளொருவரைத் தேர்ந்தெடுத்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) பந்தி (ஆ) வின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது நியமிக்கப் பட்ட ஆள், எந்த உறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் பதவிக் காலத்தில் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டுமே பதவி வகித்தல் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் தத்துவங்கள்*

*6*. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, கூட்டிணைக்கப்பட்ட குழு, பின்வரும் தத்துவமுட்பட, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் ஒன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மைத்தானவையுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் தத்துவம் கொண்டதாதல் வேண்டும்–

(அ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடிய காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொள்வனவு செய்தலும், வாடகைக்கு எடுத்தலும், நிர்மாணித்தலும், புனரமைத்தலும் மற்றும் வேறுவகையாகப் பெறுதலும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்குடன் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் தீர்மானிக்கப் பட்டவாறு அவற்றைக் கையாளுதலும் அல்லது கையுதிர்த்தலும்;

(ஆ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்து வதற்கு அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் அதன் சார்பில் நேரடியாகவாயினுஞ்சரி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரினூடாகவுஞ்சரி அல்லது முகவரினூடாகவுஞ்சரி செய்து கொள்வதற்கும் மற்றும் புரிவதற்கும் அல்லது நிறைவேற்றுவதற்கும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதற்காக பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி நிதிகளைக் கடனாகப் பெறுதலும் அல்லது திரட்டுதலும் மற்றும் காசாக அல்லது பொருளாக மானியக்கொடைகளையும், கொடைகளையும் அல்லது நன்கொடைகளையும் பெற்றுக் கொள்வதற்கும்:

ஆயின், நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையானது, கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு அளிக்கப்பட்ட எல்லா வெளிநாட்டு மானியக் கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பில், வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும்;

(ஈ) மாற்றுண்டியல்கள், காசோலைகள், வாக்குறுதிப் பத்திரங்கள் மற்றும் வேறு கைமாற்றத்தகு சாதனங்கள் என்பவற்றை ஆக்குதலும், வரைதலும், ஏற்றுக் கொள்ளுதலும், கழிப்பனவு செய்தலும், புறக்குறிப்பிடு தலும், கைமாற்றுதலும், வாங்குதலும், விற்றலும் மற்றும் வழங்குதலும் அத்துடன் ஏதேனும் வங்கியில் கணக்குகளைத் திறத்தலும், செயற்படுத்துதலும், பேணுதலும் மற்றும் மூடுதலும்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்கு உடனடியாகத் தேவைப்படாத எவையேனும் நிதிகளை நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபை தீர்மானிக்கக்கூடிய வாறான அத்தகைய முறையில் முதலீடு செய்தலும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஏதேனும் அசையாத அல்லது தனிப்பட்ட ஆதனம் அல்லது கூட்டிணைக்கப் பட்ட குழுவின் நோக்கங்களை ஒத்த ஏதேனும் சட்ட ரீதியான நம்பிக்கைப் பொறுப்பு சபை பொறுப்பேற்ற லும், ஏற்றுக்கொள்ளுதலும், நிறைவேற்றுதலும், புரி தலும் மற்றும் நிர்வகித்தலும்;

(எ) சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின்படி கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தலும், தொழிலுக் கமர்த்துதலும், பதவிநீக்குதலும் அல்லது அவர்களின் சேவைகளை முடிவுறுத்தலும் அத்துடன் அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தலும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய சம்பளங்கள், படிகள் மற்றும் பணிக்கொடைகளை அவர்களுக்குச் செலுத்துதலும் ;

(ஏ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம் படுத்தும் நோக்குடன் விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளை ஒழுங்கு செய்தலும்;

(ஐ) அக்கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டிருத்தலும், ஒருங்கிணைந்திருத்தலும்;

(ஒ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நோக்கங்களுக்காக இலங்கையில் அல்லது வெளிநாட்டில் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களைப் பயிற்றுவித்தலும் ; அத்துடன்

(ஓ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குளிக்கோள்களை எய்துவதற்காக இச்சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய எல்லாச் சட்டங்கள் மற்றும் கருமங்களைச் செய்தலும்.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் விதிகள்

**7**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஏதேனும் பொதுக்கூட்டமொன்றில், சமுகமளித்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத பெரும்பான்மையொன்றினால் பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது அவற்றுள் எதற்காகவும் இச்சட்டத்தினது அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தினது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை, காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தலும், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், உறுப்பினர்கள் விலகுதலும், அவர்களை விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியிலிருந்து நீங்குதலும் மற்றும் உறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலதான கட்டணங்களும்;

(ஆ) நம்பிக்கைப் பொறுப்புப்பாளர்கள் சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவிதாங்குநர்கள் பதவியை வறிதாக்கல் அல்லது அவர்களைப் பதவியிலிருந்து அகற்றுதல் மற்றும் அவர்களின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும்;

(இ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பல்வேறு அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களின் நியமனத்திற்கான நியதிகளும் நிபந்தனைகளும், அவர்களின் தத்துவங்களும், பணிகளும் கடமைகளும்;

(ஈ) கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையினதும் கூட்டங்களைக் கூட்டுதலும், அதனை நடாத்துதலிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் அத்தகைய கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் மற்றும் அவற்றில் அலுவல்களை நடாத்துதலும்;

(உ) நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையினதும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உறுப்பினரொருவராக விருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும்;

(ஊ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் ஆதனத்தை நிர்வகித்தலும் முகாமை செய்தலும்; அத்துடன்

(எ) பொதுவாகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்தலும், அதன் குறிக்கோள்களை எய்துதலும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழுவைக் கலைத்தலும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்பட்டதைப் போன்று அதேபோன்ற கூட்டமொன்றிலும் மற்றும் அதேபோன்ற முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகள், அத்தகைய விதிகள் ஆக்கப்பட்டதன் மேல் மூன்று மாதங்களினுள் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன் அதன்கண் மீதான தேதியன்று பயனுறுதாதலும் வேண்டும்.

(4) கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் ஆக்கப்பட்ட ஒவ்வொரு விதியும், வர்த்தமானியில் அதன் வெளியீட்டின் பின்னர் மூன்று மாதங்களினுள் அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தின் முன் கொண்டுவரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத எந்த விதியும் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எவற்றுக்கும் பாரபட்சமின்றி அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவின்கீழ் அல்லது இல்லாதொழிக்கப் பட்டதாகக் கருதப்படக்கூடிய அத்தகைய ஏதேனும் விதி பற்றிய தேதி பற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(6) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் எல்லா நேரங்களிலும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

*உறுப்பினர்கள் பற்றிய இடாப்பு*

**8**. நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையானது உறுப்பினர்கள் பற்றிய இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும்; இதில், உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அத்தியாவசியமான விபரங்கள் என்பன உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் நிதியம்*

**9**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்காகவும் அது தொடர்பாகவும் கொடை, இறுதிவிருப் பாவணக் கொடை, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக் கொடை என்ற வகையாகப் பெறப்பட்ட எல்லாப் பணங்களும், நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் பிரிவு 6 (இ) இன் ஏற்பாடுகளுக்கமைய கூட்டிணைக்கப்பட்ட குழுவின் வரவிற்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் அதனால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்ற வாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்

**10.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழு, அதன் வருமானமும் செலவினமும், சொத்துக்களும், பொறுப்புக்களும் மற்றும் கூட்டிணைக்கப்பட்ட குழு வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளரொருவரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அது அத்தகைய தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் சான்றுப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ''தகைமைபெற்ற கணக்காய்வாளர்'' என்பது-

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக உள்ளவரும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராக உள்ளவருமான தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் உள்ளாரோ அக்கணக்காளர்கள் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

வருடாந்த அறிக்கை

**11.** (1) நம்பிக்கைப் பொறுப்புச் சபையானது ஒவ்வொரு நிதியாண்டுக்குமான கூட்டிணைக்கப்பட்ட குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் சான்றுப்படுத்தப்பட்டு கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் சேர்த்து சுகாதாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ள அமைச்சிரின அமைச்சுச் செயலாளருக்கும், 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் பதிவாளருக்கும், அத்தகைய அறிக்கை எந்த ஆண்டு தொடர்பானதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆண்டின் ஆறு மாதங்கள் முடிவுறுவதற்கு முன்னர் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் பெறப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பணங்கள் தொடர்பாகத் தனிவேறான கணக்கொன்று (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தினால் செலுத்தப்பட வேண்டியவையும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்தப்படற் பாலவையுமான தனிசுகள்

**12.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று உளதாயிருக்கும் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்பாலனவான ஒப்பப்பணங்களும் உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டிணைக்கப்பட்ட குழுவிற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டிணைக்கப்பட்ட குழு அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்

**13.** இச்சட்டத்தினதும் மற்றும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டிணைக்கப்பட்ட குழு, ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறு வகையில் அதற்கு உரித்தாகவரக்கூடியதான ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எடுப்பதற்கும்

வைத்திருக்கவும் சட்டப்படி இயன்றதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய எல்லா ஆதனங்களும் இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும், 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கான தத்துவத்துடனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

பணங்களையும் ஆதனத்தையும் பயன்படுத்தல்

**14**. எவ்வாறாயினும் பெறப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணங்களும் ஆதனமும் அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் அல்லது எவ்வாறிருப்பினும் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

கூட்டிணைக்கப் பட்ட குழுவின் இலச்சினை

**15**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினையானது நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையின் இரு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி எத்தகையதுமான ஏதேனும் சாசனத்தில் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் இலச்சினை நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சபையினால் முடிபு செய்யப்படக்கூடியவாறான அத்தகைய சபையின் பதவிதாங்குநரொருவரின் கட்டுக்காப்பிலிருத்தலும் வேண்டும்.

கலைக்கப்பதன் மேல் எஞ்சியுள்ள ஆதனம்

**16**. (1) கூட்டிணைக்கப்பட்ட குழு கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாத் தனிசுகளையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்த்த பின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது. ஆனால் கூட்டிணைக்கப்

பட்ட குழுவின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களை யுடையதும், அதன் விதிகளின்படி அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான வேறு ஏதேனும் நிறுவனத்திற்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்களின் வாக்குப் பெரும்பான்மை கொண்டு கலைப்புக்கு நேர்முன்னர் தோதான நிறுவனம் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியியல் உரிமைகளைப் பேணல்

**17**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசின் உரிமைகளை அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக் கப்பட்ட குழுவின் உரிமைகளை பங்கப்படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

பொருள் கோடல்

**18**. இச்சட்டத்தில்–

“வங்கி” என்பது, 1988 இன் 30 ஆம் இலக்க, வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் உரிமம் பெற்ற வங்கி எனப் பொருள் படும்;

“சட்டம்” என்பது, அரசியலமைப்பில் அத்தகைய சொல்லமைப்புக்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்; அத்துடன்

“எழுத்திலான சட்டம்” என்பது, மாகாண சபையினால் ஆக்கப்பட்ட நியதிச்சட்டங்கள் மற்றும் அத்தகைய நியதிச்சட்டங்கள், கட்டளைகள், பிரகடனங்கள், விதிகள், துணைச் சட்டங்களின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் அவற்றை ஆக்குவதற்கு அல்லது வழங்குவதற்கு ஏதேனும் சட்டத்தின்கீழ் தத்துவத்தை அல்லது அதிகாரத்தைக் கொண்டுள்ள ஏதேனும் குழுவினால்

அல்லது ஆளினால் ஆக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள் உள்ளடங்கலாக ஏதேனும் சட்டம் மற்றும் துணை நிலைச் சட்டவாக்கம் எனப்பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**19.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*